அழைக்கின்றது—
எழில் மிகு இயற்கைக்
காட்சிகளை வண்ணப்
படமாகத் தந்தி
தரமான வர்ண
புகைப்படச் சுருள்களை
பெற்றுக் கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

உங்கள் எண்ணம் போல்
வர்ணப் புகைப்பட பிரதிகள்
துரித கதியில்
குறைந்த செலவில்,
நிறைந்த சேவையில்;
நாடுங்கள்.
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T'Phone: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு பங்குனி மீ 13 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 14 (26 03 1986) UTHAYAM - A LIVELY TAMIL DAILY கதிர்:110

## யாழ்ப்பாணத்தில் குண்டு வீசிய விமானம் கடலில் வீழ்ந்தது!

கொழும்பு, மார்ச் 26

அரசாங்கத்துக்குச் சொந்தமான குண்டு வீச்சு விமானம் கடலில் விழுந்து மூழ்கியது! விமானிகள் இருவர் மரணம்!!

யாழ்ப்பாணத்தில் குண்டு வீச்சு நடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட இத்தாலிய ஷாப்ரா விமானங்களில் ஒன்றே இது என்று நம்பப்படுகிறது.

பேருவளைக்கு அருகில் இந்த விபத்து நடந்தது. நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்ற விபத்தில் பி. கருணரத்ன என்ற விமானியும் கே புஞ்சிஹெட்டி என்ற உதவியாளரும் (கடேற் அதிகாரி) மரணமானார்கள்.

தேடுதலின் பின்னர் இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

விமானம் கடலின் அடியில் மூழ்கிவிட்டதாக நம்பப்படுகிறது.

விபத்துக்கான காரணம் இன்னும் சரியாக அறியப்படவில்லை.

## சூடுபிடிக்கிறது

திரிபோலி, மார்ச் 25

லிபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இன்று இரண்டாவது நாளாக மோதல்கள் இடம் பெற்றன.

லிபிய ஏவுகணை நிலையம் ஒன்றையும் இரு லிபிய ரோந்து படகுகளையும் அமெரிக்க விமானங்கள் இன்று நாசமாக்கின.

[முன் வந்த செய்தி 2ஆம் பக்கம்]

ஓமந்தை அருகே

# குண்டு வெடித்து யாழ்தேவி தீயில்

## பயணிகளுக்கு பாதிப்பு இல்லை; என்ஜின் சிதறி பெரும் சேதம்

— அலுவலகச் செய்தியாளர் பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற யாழ் தேவி ரயில் ஓமந்தைக்கு அருகில் குண்டு வெடித்ததால் தீப்பற்றி எரிந்தது

பயணிகள் முன்னெச்சரிக்கையுடன் ஏற்கனவே இறக்கப்பட்டு விட்டதால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை.

பயணிகளில் ஒரு பகுதியினர் பஸ்கள் மூலம் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். ஏனையோர் இன்று வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

குண்டு வெடித்ததால் ரயில் என்ஜின் பெருத்த சேதம் அடைந்தது. என்ஜினை அண்டியிருந்த ரயில் பெட்டிகள் சிலவற்றில் தீப்பற்றி எரிந்து அவையும் சேதமாகின.

குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்று நண்பகல் சுமார் ஒரு மணியளவில் இடம்பெற்றதாக அறிய வருகிறது.

இச்சம்பவம் குறித்து நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணிகள் மூலம் அறியவந்ததாவது:-

ஓமந்தைக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் உள்ள பனிக்க நீராவி என்ற இடத்தில் ரயில் சென்று கொண்டிருந்த போது இனம் தெரியாத ஆயுதம் தாங்கிய சுமார் பத்துப் பேர் கொண்ட கோஷ்டி ஒன்று சிவப்பு சமிக்ஞை காட்டி ரயிலை மறித்தது.

ரயில் பாதையில் குண்டுவைத்திருப்பதைக் கண்டு பிடித்துள்ளோம். நீங்கள் போகாதீர்கள் எனக்கூறி ரயிலிலிருந்து பிரயாணிகளை இறக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் தாதிமார் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் பெரியாஸ்பத்திரி தாதிமார் இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

தாதிமாரின் சம்பள உயர்வுப் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

முச்சந்தி முனி



அடாது செய்தவர் படாது படுவர் எண்டு வாத்தியார் சின்னனிலை சொல்லித் தந்தது ஞாபகத்துக்கு வருகுது!

## ஒருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 26

சபுஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் காஸ்சிலிண்டர் ஒன்று வெடித்து ஒருவர் மரணமானார்.

மூன்று பேர் காயமடைந்தனர்.

# கண்ணி வெடி வவுனியா, திருமலையில்

## சிப்பாய்கள் மூவர் பலி; பலர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

நேற்று திருகோணமலையிலும் வவுனியாவிலும் இரு கண்ணிவெடிச் சம்பவங்கள் இடம்பெற்றன.

திருமலைச் சம்பவத்தில் 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். 4 சிப்பாய்கள் காயம் அடைந்தனர்.

வவுனியாவில் 7 சிப்பாய்கள் (கமாண்டோ பொலீஸ்) காயம் அடைந்தனர்.

வவுனியா கண்ணிவெடித் தாக்குதல் வவுனியா மகாவித்தியாலயத்துக்கு அருகில் இடம் பெற்றது

இச் சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

கமாண்டோ பொலீஸார் நேற்றுக் காலை சுமார் 8 45 மணியளவில் மூன்று ஜீப்புகளில் வந்துகொண்டிருந்த போது இரண்டாவது ஜீப் கண்ணி வெடியில் சிக்கியது.

காயம் அடைந்த கமாண்டோப் பொலீஸார் உடனடியாக வவுனியா இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

### திருமலையில்

திருகோணமலைச் சம்பவம், திருகோணமலை கண்டி வீதியில் உள்ள கித்துலுத்து என்னும் இடத்தில் நடந்தது.

நேற்றுக் காலை 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. திருமலைச்சம்பவத்தில் இறந்த சிப்பாய்கள் பெயர் விவரங்கள் வருமாறு;

ஜே எம். அபயக்கூன் (பண்டா) (வயது 27)

பி. ஜி. பெர்னாண்டோ (வயது 41)

எஸ் ஜெயரத்ன, (வயது 25)

இவர்களின் மரண விசாரணைகளை நேற்று பதில் நீதிவான் திரு. எம். கே செல்வராசா நடத்தினார்.

தாக்குதலில் உயிர் தப்பிய கஜபாகுப் பிரிவு மேஜர் குலதுங்க சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

திருமலை, பிரட்ரிக் கோட்டை முகாமில் இருந்து இரண்டு கவச வாகனங்களிலும் மூன்று வாகனங்களிலும் சிப்பாய்கள் ஹபரணை நோக்கி காலையில் சென்றனர்.

காலை சுமார் 11 மணியளவில் கித்துலுத்து என்ற இடத்தை அண்மித்ததும் வெடிச் சத்தம் ஒன்று கேட்டது.

முன்னால் சென்ற கவச

(4ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் பதற்றம் நீங்கியது

## எம். பி முயற்சியால் தமிழர் விடுவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 26

கடத்தல் சம்பவங்களைத் தொடர்ந்து நான்கு தினங்களாக மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதிகளில் நிலவிய பதற்றம் நேற்றுடன் நீங்கியது. நிலைமை வழமைக்குத் திரும்பியது

மட்டக்களப்பு 2ஆவது எம். பி ஜனாப் ரிஸ்வி சின்னலெப்பையின் தலையீட்டைத் தொடர்ந்து, கடத்தப்பட்ட நான்கு தமிழர்களும் நேற்று அதிகாலை மஞ்சந்தொடுவாய் எல்லையில் விடுவிக்கப்பட்டனர்.

விசேட விமானத்தில் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு விரைந்து வந்தார் ஜனாப் ரிஸ்வி சின்னலெப்பை.

தமிழரைக் கடத்திச் சென்றவர்கள் என்று கருதப்படுபவர்களை ஜனாப். சின்னலெப்பை சந்தித்து கடத்தப்பட்ட தமிழரை விடுவிக்கும்படி கோரினார்.

"தீமை செய்தவருக்கு தீமை செய்வது விரும்பத்தக்கது அல்ல. அது காத்தான்குடிக்குப் பெருமை தராது" — இப்படி ஜனாப். சின்னலெப்பை சொன்னார்.

இதன் பின்னர் 4 தமிழரும் விடுவிக்கப்பட்டனர். கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 2 முஸ்லிம்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

## கொழும்புவரும் வாகனங்கள் பலத்தசோதனை

கொழும்பு, மார்ச் 26

கொழும்பு மாநகருக்குள் வரும் வாகனங்கள் எல்லாம் நேற்று ஆயுதப் படையினரால் பலத்த சோதனை இடப்பட்டன.

விக்டோரியாப் பாலத்தடியில் பாதுகாப்புப் படையினர் இச்சோதனைகளை மேற்கொண்டார்கள்.

## வடக்கில் லலித்

கொழும்பு, மார்ச் 26

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று மன்னார், கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தார்.

சிலாவத்துறை, செட்டிகுளம் இராணுவ முகாம்கள் உட்பட மன்னாரில் உள்ள சகல முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டார்.

கிளிநொச்சியில் உள்ள முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்தார்.

கொழும்பு திரும்பும் வழியில் ஓமந்தையில் குண்டு வைத்துச் சேதமடைந்த ரயிலையும் பார்த்தார் எனவும் அறியப்படுகிறது.

## நாவற்குழியில் நேற்றும் ஷெல் தாக்குதல்

நல்லூர், மார்ச் 26

நாவற்குழியில் நேற்றும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

நாயன்மார்கட்டுப் பக்கமாக விழுந்த இந்த ஷெல்லினால் ஒரு வீடு சிறிது சேதமடைந்தது.

# தம்பாலை சந்தி வரை வந்த சீருடையினர்

## பொதுமக்கள் இருவர் காயம்

— பலாலி செய்தியாளர் —

பலாலி, மார்ச் 26

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியே வந்த சீருடையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் இருவர் காயம் அடைந்து யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுப் பிற்பகல் இரண்டு மணி அளவில் தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து நாற்றுக்கும் அதிகமான சீருடையினர் வெளியே வந்தனர்.

இவர்கள் வீதியின் இருமருங்கேயுமுள்ள வயல் வெளிகள் ஊடாகவும், தோட்டங்கள் ஊடாகவும் முக்கால் மைல் தூரம் முன்னேறி அச்சுவேலி தம்பாலைச் சந்தி வரை வந்திருந்தனர்.

இதனால் இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர்

அப்போது சீருடையினர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் இருவர் காயமடைந்த நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சுமார் அரை மணி நேரம் தம்பாலைச் சந்தியில் நின்ற சீருடையினரைப் பின் வாங்கச் செய்வதற்காக போராளி

(4ஆம் பக்கம் பார்க்க)

## அராலியில் நேற்று மறியல்

பண்டத்தரிப்பு, மார்ச் 26

சங்கானை — அராலி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் மினிபஸ்களை ஓடவிடாது மறித்து அராலி மக்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர்.

அவர்கள் வைத்திருந்த சுலோக அட்டைகளில் "இ.போ.ச. பஸ் சாரதிகளை மிரட்டாதீர்கள்" "இந்த வீதியூடாக செல்லும்போது பாகுபாடு இன்றி அனைவரையும் ஏற்று" 'தனியார் மினி பஸ்கள் இந்த வீதியில் தான்தோன்றித்தனமாக நடக்க முடியாது" என்பன போன்ற சுலோகங்கள் காணப்பட்டன.



ராஜீவின் 'கடும்பிடி!'

# திட்டவட்டமான யோசனை தந்தால் மட்டும் பண்டாரியை அனுப்புவேன்

புதுடில்லி, மார்ச் 25

திரு. ரொமேஷ் பண்டாரியை இலங்கைக்கு அனுப்ப பிரதமர் ராஜீவ் காந்தி நிபந்தனை விதித்திருக்கிறார்.

திட்டவட்டமான நிலையான யோசனைகளுடன் இறுதிப் பேச்சுக்கள் நடத்த இலங்கை தயாராக வந்தால் மட்டுமே திரு. பண்டாரியை இலங்கைக்கு அனுப்புவேன் என்று பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அறிவித்துவிட்டார்.

பேச்சுக்கள் மூலம் தீர்வு காணத் தயாராக இருப்பதாக இலங்கை அரசு அடிக்கடி கூறும் உறுதிமொழிகளை நம்பி, திரு. பண்டாரியை இலங்கைக்கு அனுப்ப இந்தியா தயாராக இல்லை என்றும் திரு. ஜெயவர்த்தனவுக்கு அறிவிக்கப்பட்டு விட்டது.

முதலில் திட்டவட்டமான யோசனைகளுடன் வருவது, பின்னர் அந்த நிலையில் இருந்து பின் வாங்குவது—

இந்த ரீதியில் இலங்கை செயல்படுவது பற்றிய வெறுப்பை இந்தியத் தூதர் டிக்ஸிற் மூலமும் இலங்கைத் தூதர் பெர்னாட் திலகரட்ன மூலமும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பெண் உட்பட ஐவர் கொலை கடைகள் 4 தீயில் நாசம்!

யாழ்ப்பாணம், மார்ச் 26

வவுனியா கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து ஒரு பெண் உட்பட ஐவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர். நான்கு கடைகள் எரிக்கப்பட்டன. நகரம் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தது

வவுனியா பிரஜைகள் குழு செயலாளர் டாக்டர் பரராஜசிங்கமும், அரசாங்க அதிபர் திரு. கே லோகேஸ்வரனும், வவுனியா பிரதி இணைப்பு அதிகாரி ரஞ்சன் சில்வாவுடன் அவசரமாக தொடர்பு கொண்டதை அடுத்து கமாண்டோ பொலீஸார் முகாமுக்குத் திருப்பி அழைக்கப்பட்டனர்

பின்பு இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இத்தேடுதலின் போது வவுனியா கண்டி வீதியில் உள்ள மாணிக்க பிள்ளையார் கோயில் சுற்றுடலில் 15பேர் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஐவரினது விவரம் வருமாறு:-

1. திருமதி மகேஸ்வரன் ஞானேஸ்வரி (வயது43) 7 பிள்ளைகளின் தாயார்.

2 சதாசிவம் கமலநாதன் (வயது22) கருவாட்டுக்கடை முதலாளி, பஜார் வீதி.

3. மாணிக்கம் துரைராஜா (வயது40) 3 பிள்ளைகளின் தந்தை. வவுனியாவில் கருவாடு விற்பனை செய்பவர். அச்சுவேலி வாசி.

4. கோவிந்தன் (வயது 45) மரக்கறி வியாபாரி.

5. கால் ஊனமான பிச்சைக்காரர் ஒருவர். வயது [60 இருக்கலாம். இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை பெயர் அறியமுடியவில்லை

ஜலண்ட் கபே, ஞான

(4ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தக வங்கி கட்டடம் தீப்பிடித்தது

கொழும்பு, மார்ச் 26

இலங்கை வர்த்தகர் வங்கித் தலைமைக் காரியாலயக் கட்டடத்தின் முதலாவது மாடியில் கடந்த திங்கள் இரவு தீப்பற்றியது.

மின்னொழுக்கு காரணமாக தீப்பிடித்தது என்று பொலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

### சுபநேரம்

26- 3- 1986
புதன்கிழமை

சுபநேரம்:
4.45 முதல் 6.15 வரை

ராகுகாலம்:
12.15 முதல் 1 45 வரை

[illegible]

# கடையை திறந்த ஞானேஸ்வரி தலையில் சூடுபட்டு சுருண்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வவுனியா கண்ணி வெடியை அடுத்து இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்த ஐவரில் திருமதி மகேஸ்வரன் ஞானேஸ்வரியும் ஒருவர்.

இவர் வவுனியா முருகன் ஸ்ரோர்ஸ் பலசரக்குக்கடை உரிமையாளரின் மனைவி.

சம்பவ நேரம் இந்தக் கடை பூட்டப்பட்டிருந்தது. கடைக்குள் கடை உரிமையாளர் மகேஸ்வரனும் மனைவி ஞானேஸ்வரியும் மகனும் இருந்தனர்.

சிப்பாய்கள் சிலர் கடைக் கதவைத் தட்டிய போது மகேஸ்வரனும் மகனும் மறைவான இடத்தில் பதுங்கிக் கொண்டனர்

ஞானேஸ்வரி கதவைத் திறந்தபோது தலையில் துப்பாக்கிக்குண்டு பாய்ந்து அதே இடத்தில் மரணமானார்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெந்தேவளைகுடாவில் அமெரிக்க லிபிய மோதல்

## லிபிய ரோந்துப்படகை மூழ்கடித்ததாக வெள்ளை மாளிகை களிப்பு

லண்டன், மார்ச் 25

லிபியாவுக்குச் சொந்தமான கடற்படை ரோந்துப் படகொன்றை அமெரிக்க கடற்படைகள் தாக்கி மூழ்கடித்துள்ளன.

இதற்கு முன்னதாக அமெரிக்காவின் 3 விமானங்களை தான் சுட்டு வீழ்த்திவிட்டதாக லிபியா அறிவித்தது.

லிபிய தொலைக்காட்சி தனது நிகழ்ச்சியை நிறுத்திவிட்டு விமானத்தை சுட்டு வீழ்த்திய செய்தியை அறிவித்தது.

அந்த அறிவிப்பில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்கள் லிபியாவின் ஷெந்தே வளைகுடா எல்லைப்பகுதியுள் அத்துமீறிப் பறந்து பயங்கர ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பெரியதொரு அச்சுறுத்தலாகவும் அது இருந்ததெனவும் தெரிவிக்கப்பட்டது.

லிபியப்படகுமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பற்றி கருத்துத்தெரிவித்த வெள்ளை மாளிகைப் பேச்சாளர் லாறி ஸ்பீக்ஸ்,

அமெரிக்கவிமானங்கள் எதனையும் லிபியா சுட்டு வீழ்த்தவில்லை அது ஒரு முழுப் பொய்.

அமெரிக்கப் படைகளின் தாக்குதலுக்கு இலக்கான ரோந்துப் படகு நீரில் அமிழ்ந்து கொண்டிருக்கிறது.

அனேகமாக அதிலிருந்து ஒருவர்கூட உயிர் பிழைத்திருக்க முடியாது அந்த அளவுக்கு அடிபட்டுள்ளது.

லிபியாவின் இன்னொரு ரோந்துப் படகும் பலமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன் ஷெந்தேதுறை முகத்திலிருந்து இயங்கிய ஏவுகணைத்தளம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த குண்டுத் தாக்குதல்களால் லிபியாவின் ஷெந்தே நகரப்பகுதி பலத்த பாதிப்புக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

### கொலை முயற்சி வழக்கு விசாரணை

பரிசுத்த பாப்பரசரைக் கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கின் தீர்ப்பு அல்லது வழங்கப்படும் தண்டனை விபரம் அடுத்த தவாரம் தெரிவிக்கப்படுமென நம்பப்படுகிறது.

### ஒளிமயமான எதிர்காலத்தை நம்பியிருக்கிறார் கங்கா

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கங்கா மளமளவென்று பல படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இராம. நாராயணனின் இரகசியம், ஒரு நல்லவன் ஒரு வல்லவன், ஜோதிமலர், ராஜசேகரின் கண்மணியே பேசு, காலமெல்லாம் உன் மடியில், வி. வி. சுந்தரின் புதிய ராகம்— இவை கங்கா நடித்த படங்கள்.

படப்பிடிப்புத் தளத்தில் கங்கா சிறப்பாக நடிப்பதைப் பார்த்த டெக்னீஷியன்கள்

**தினசரி சினிமா**

இவருக்கு இப்படி இந்த இடைவெளி உண்டானது என்று ஆச்சரியப்பட்டார்களாம்.

மண்வாசனை படத்தில் பாண்டியன் நடித்த கதாநாயகன் பாத்திரத்திற்கு இவரைத்தான் ஆரம்பத்தில் வந்து பார்த்திருக்கிறார்கள்.

பாத்திரத்திற்குப் பொருத்தமாக இருக்கிறார் என்று இவர் 'ஓகே' ஆகி விட்டாராம்.

அந்தச் சமயத்தில் உயிருள்ளவரை உஷாவில் நடித்துக் கொண்டிருந்ததால், விருப்பப்பட்டும் அந்தப் படவாய்ப்பை ஒத்துக் கொள்ள முடியாமல் போய்விட்டதாம்.

இதேபோல் மெல்லப் பேசுங்கள் கதாநாயகன் பாத்திரமும் இவருக்கு வர இருந்து கைநழுவிப் போய்விட்டது.

கே. விஜயனின் சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பான ஆனந்தக் கண்ணீர் படத்தில் நடிகர் திலகத்தின் மகளாக நடிப்பதற்கு இவரை அணுகியிருக்கிறார்கள் படத்தில் பிரதான பங்கு வகிக்கும் பாத்திரம் அது

எனினும் அப்போது இரண்டு படங்களில் நடித்துக் கொண்டிருந்ததால் அந்த நல்ல வாய்ப்பையும் நழுவவிட்டுவிட்டார். இந்த அருமையான வாய்ப்பை இழந்தது குறித்து மிகவும் வேதனையடைகிறார் கங்கா

கமால் மாஸ்டரிடம் முறைப்படி சண்டைப் பயிற்சி பெற்றிருக்கும் கங்கா, இந்த ஆண்டில் ஒளிமயமான வரவேற்பு இருக்கும் என்று திடமாக நம்புகிறார்.

### நீதிவிசாரணை

புதுடில்லி, மார்ச். 25

ஜம்மு-கஷ்மீர் பகுதியில் காணாமல் போன விமானம் தொடர்பாக நீதி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென உத்தர விடப்பட்டுள்ளது.

விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் கால நிலை காரணமாக வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரான்ஸின் அமைச்சரவை

பாரிஸ், மார்ச். 25

பிரான்ஸில் அதிகாரத்துக்கு வந்துள்ள வலதுசாரி அரசின் அமைச்சரவை முதல் கூட்டம் அங்கு நடைபெற்றது.

ஜனாதிபதி மித்தரான்ட் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

அடுத்த மாதம் கூடவிருக்கும் தேசிய சபையில் நம்பிக்கை வாக்குப் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

**வெளி உலகில்**

## பாகிஸ்தானுக்கு வருகிறது அமெரிக்க நிதி உதவி

### 400 கோடி டாலர் ஒதுக்கீடு

புதுடில்லி மார்ச், 25

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 400 கோடி டாலர் பணத்தை உதவி நிதியாக ஒதுக்கியுள்ளது.

பாகிஸ்தானின் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கு இது பயன்படுத்தப்படுமென பாகிஸ்தான் கூறியுள்ளது.

எனினும் இந்த அமெரிக்க நிதியின் குறிப்பிடக்கூடிய பகுதி பாகிஸ்தானின் படைகளை நவீனமயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுமெனவேதம்பப்படுகிறது

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சிப்படைகளுக்கு உதவும் நோக்குடனும் இந்த நிதியின் ஒருபகுதி ஒதுக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

பாகிஸ்தானில் அமெரிக்க அக்கறைகள் கூடுதலாக இருப்பது அங்குள்ள எதிர்க்கட்சிகள் மட்டத்தில் மேலும் ஆத்திரத்தைத் தூண்டி விட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க நிதிபற்றி கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் மக்கள் கட்சி பாகிஸ்தான் அமெரிக்கமயமாகிக் கொண்டிருப்பதாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே பாகிஸ்தானில் 11 எதிர்க்கட்சிகள் சேர்ந்த ஜனநாயக மீட்பு அணி அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியது.

### பிலிப்பீன்ஸ் கெரில்லாக்கள் ஆயத்தம்

மணிலா, மார்ச் 25

பிலிப்பீன்ஸில் கொம்யூனிஸ்ட் கெரில்லா இயக்கம் முதன்முறையாக யுத்த நிறுத்த அறிவிப்புப் பற்றிக் கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி திருமதி கொரஸன் அக்கியூனோவின் யுத்த நிறுத்த அழைப்புப் பற்றி நாம் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக அந்த அறிவிப்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாக செய்திகளில் தெரிவிக்கப்பட்டது

### நாஸிக் குற்றவாளி வால்ட்ஹெய்ம்

#### ஆவணச் சான்று கிடைத்துள்ளது என்கிறது யூத காங்கிரஸ்

நியூயோர்க், மார்ச் 25

முன்னாள் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் டாக்டர் வால்ட்ஹெய்ம் நாஸிப் படையைச் சேர்ந்த குற்றவாளி எனவும் இதற்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் செல்வாக்கு மிக்க இயக்கமொன்று தெரிவித்துள்ளது.

1948 ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவ ஆவணம் ஒன்றில் இவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாக இந்த இயக்கம் தெரிவித்துள்ளது

உலக யூத காங்கிரஸ் என்ற இந்த இயக்கம் வால்ட்ஹெய்ம் பற்றிய தகவல்களை கடந்த இரு மாதங்களாக கருத்தூன்றி ஆராய்ந்து வருகிறது.

அமெரிக்க ஆவணம் பற்றி மேலும் தெரிவித்த யூத காங்கிரஸ், 'குரோகாஸ்' என அழைக்கப்படும் பாதுகாப்பு சந்தேக நபர்கள் மற்றும் யுத்தக் குற்றவாளிகள் தொடர்பான கூட்டுப் பதிவகத்தில் இருந்தே இந்த ஆவணம் கிடைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலை நடவடிக்கைகள் தொடர்பாக யூகோஸ்லவேகியாவால் அன்று தேடப்பட்ட ஒருவர் வால்ட்ஹெய்ம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### பாரத - அமெரிக்க கூட்டுக்குழு

புதுடில்லி, மார்ச் 25

பாரதமும் அமெரிக்காவும் போதைப்பொருட் கடத்தல் தடுப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உடன்பாடு கண்டுள்ளன

இதற்கான கூட்டுக் குழுவொன்று அமைப்பது பற்றியும் உடன்பாடு காணப்பட்டது

இது தொடர்பாக பாரதம் வந்துள்ள அமெரிக்க அட்டோனி எட்வின் மீ பாரதப் பிரதமர் மற்றும் நிதி மந்திரி ஆகியோரையும் சந்தித்துள்ளார்


எமது புதிய வெளியீடுகள்

☆ சத்தியராஜ் — அம்பிகா
'ரசிகன் ஒரு ரசிகை'
(V.G.P. Master)

★ ரஜனிகாந்த் — ஸ்ரீதேவி
'நான் அடிமை இல்லை'
(V.G.P- Master)

★ ஜெய்சங்கர் — சரிதா
'குங்குமப் பொட்டு'
(V-G-P- Master)

★ கார்த்திக் — சுலக்சனா
'பாடும் பறவைகள்'
(V-G-P- Master)

★ கபில்தேவ் — சில்க்
'நினைத்ததை முடிப்பவன்'
V-G-P- Master)

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665


**மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்**

# இராணுவ முகாமால் 400 பேர் அகதிகள்

## நிவாரணம் கோருகிறது அக்கரைப்பற்று பிரஜைகள் குழு

கல்முனை, மார்ச் 26

"அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைப் பகுதியில் அமைக்கப்பட்ட பொலிஸ் அதிரடிப் படை முகாமினால் அப்பகுதியில் வசிக்கும் 87 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 400 பேர் குடி பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். அவர்கள் வசிப்பதற்கு காணிகளும் போதிய நிவாரண உதவிகளும் வழங்குங்கள்."

அக்கரைப்பற்று பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு விடுத்த அவசர வேண்டுகோள் ஒன்றிலேயே இப்படிக் கோரப்பட்டிருக்கிறது.

இந்த 400 பேரும் ஏழைத் தொழிலாளிகள். தற்போது அக்கரைப்பற்று ஆர். கே. எம். மகா வித்தியாலயத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு வாராந்தம் வழங்கும் நிவாரணப் பொருள்கள் போதுமானவை அல்ல.

இவர்களின் பிள்ளைகள் சுமார் 200 பேர் கல்வி பயின்று வந்த கல்முனை செல்.ஜோன்ஸ் வித்தியாலயமும் ஆயுதப்படையினரால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது.

அதனால் இவர்களின் கல்வி முற்றாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி ஆயுதப்படை முகாமிற்குள் 30 வருட பழமைவாய்ந்த ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயம் உள்ளது அருகில் நாகேஸ்வரர் கோயில் அமைந்திருக்கிறது.

ஆயுதப்படையினரின் நடவடிக்கைகளினால் இக்கோயில்களில் வழிபாடுகள், பூசைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன

முகாமிற்குப் பக்கத்தில் பௌத்த, கிறிஸ்தவ இந்து மக்களின் சுடுகாடு இருக்கிறது.

முகாம் இருப்பதால் தமது மக்களின் இறுதிக் கிரியைகளுக்காக சுடுகாட்டிற்கு செல்வதற்கு பொதுமக்கள் அஞ்சுகிறார்கள்.

அப்படிச் செல்வோரின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்படுகிறது.

இப்படி ஜனாதிபதிக்கு முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்ட பௌத்த பீடாதிபதிகளின் தலைவரும் பிரஜைகள் குழுவின் போஷகருமான சங்கைக்குரிய வறக்காப்பொலை ஸ்ரீ ரத்ன தேரர், பிரஜைகள் குழுத் தலைவர் ஜனாப். ஏ. எம். அசீமது லெப்பை, செயலாளர் திரு எஸ். ஐ. மூர்த்தி ஆகியோர் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

### தாதிகளுக்கு பயமுறுத்தல்

கொழும்பு, மார்ச் 26

வேலைக்குத் திரும்பிய சில தாதிகளுக்கு பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சுக்கு முறையிடப்பட்டுள்ளது.

இதனால் வேலைக்குத் திரும்பிய தாதிகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கும் ஏற்பாடுகளை சுகாதாரத் திணைக்களம் செய்துள்ளது.

இதனிடையில் [illegible] டன் சென்றிருந்த சுகாதார அமைச்சர் [illegible] ரஞ்சித் அத்தபத்து நாடு திரும்பிவிட்டார்

### தொண்டமானாறு; வயோதிபர் காயம்

நல்லூர், மார்ச் 26

தொண்டமானாற்றில் திங்கள் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவர் காயம் அடைந்தார்.

தொண்டமானாறு இராணுவ முகாம் அருகே வசிக்கும் சே. ஆறுமுகம் (45 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

வீட்டைவிட்டு வெளியே வந்தபோது சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் இலக்கானார்.

இவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டு யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

### கொட்டடியில் இணக்கசபை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் கொட்டடி மத்திய பகுதியில் இணக்க சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட், சேவல் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. தொடர்பு: சிமாட்டி பான்சி, 158, நவீன சந்தை, யாழ்ப்பாணம். சிமாட்டி பாம்ஸ், ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு, சுன்னாகம்.


### உருக்கமான வேண்டுகோள்!

கடந்த 16-2-86 அன்று மூன்று இனந் தெரியாத நபர்கள் ஓர் இயக்கத்தின் பெயரைச் சொல்லி எனது 84 ஸ்ரீ 6796 என்ற இலக்கமுள்ள (CD 70) மோட்டார் சயிக்கிளை முக்கால் மணித்தியாலத்தில் தருவதாகக் கேட்டு எடுத்துச் சென்றார்கள். இப்போ ஒரு மாதத்திற்கு மேலாகியும் மோட்டார் சயிக்கிளைத் திருப்பித்தரவில்லை. எனது சீவியமே இதில் தங்கி இருப்பதனால் புனிதமான இயக்கங்கள் தயவுசெய்து இதனை மீட்டுத் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

P. செல்வராஜ்

கரப்பன் மேற்கு,
ஊர்காவற்றுறை.

**மக்கள் முகம்**

### முஸ்லிம் லீக் போட்டியிட பிரேரணை

அம்பாறை, மார்ச். 26

அரசாங்கம் நடத்த இருக்கும் பிரதேசசபைத் தேர்தல்களில் அகில இலங்கை முஸ்லிம் லீக் போட்டியிட வேண்டும்.

இப்படிக் கூறும் பிரேரணை ஒன்று மார்ச் 30 இல் கொழும்பில் நடைபெற உள்ள அகில இலங்கை முஸ்லிம் வாலிப முன்னணி மாநாட்டில் கொண்டு வரப்படவுள்ளது

முஸ்லிம் லீக்கின் கிழக்குப் பிராந்திய தேசியக் கவுன்ஸிலில் இப்பிரேரணையைக் கொண்டு வர முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

### நிர்வாகிகள்

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த சனிக்கிழமை சுன்னாகம்றேமன் கந்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு தி. மாணிக்கவாசகர் செயலாளராக திரு இ. சுப்பிரமணியம் உபதலைவர்; சட்டத்தரணி வி. சிவஞானம். உபசெயலாளர்கள். திரு. சபா. புஷ்பநாதன். திரு. வெங்கடேஸ்வர சர்மா திரு. வி. துரைராஜா திரு. எஸ். ராஜா.

பொருளாளர்: திரு கே. சுப்பிரமணியம். ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது

## நீதியின் அடிப்படையில் அரசியல் தீர்வு!

### யோகேந்திரா துரைசாமி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 26

சமத்துவம், நீதியின் அடிப்படையில் உண்மையான அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட அரசியல் தீர்வு ஒன்றை விரைந்து காணும்படி இந்து சமய நிறுவனங்களின் சவுன்ஸிலில் தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமி அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் விளைவிக்கப்பட்ட சேதங்கள் குறித்து தனது அறிக்கையில் கண்டனமும் தெரிவித்துள்ளார் திரு யோகேந்திரா துரைசாமி.

## தீவுப்பகுதிகளுக்கான உணவு விநியோகம் பற்றிய மாநாடு

யாழ்ப்பாணம், மார்ச் 26

தீவுப்பகுதிகளுக்கான உணவு விநியோகக் குறைபாடுகளை நீக்குவது சம்பந்தமான ஒரு கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அரச அதிபர் திரு. வை. எம். பஞ்சலிங்கம் இம்மாநாட்டைக் கூட்டுகிறார்.

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், எழுவைதீவு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஆகியவற்றின் அதிகாரிகள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.


Home Finance Limited
82, Kannathiddy Road. JAFFNA.
APPEAL TO ALL DEPOSITORS HAVING DEPOSITS WITH US.

In order to give affect to the withholding Tax on Interest payable on deposits as per Inland Revenue Act No. 56 of 1985. We request all depositors to kindly furnish us a declaration in the following form before 1-4-86.

RE: DECLARATION BY DEPOSITORS TO FINANCIAL INSTITUTION.

(a) Name:
(b) Present Address:
(c) National Identity Card No. or Business Registration No,
(d) Income Tax File No.
(e) Account Nos of all individual deposits and joint deposits including those of children under 18 years of age.

Account No. | Amount Deposited
1.
2.
3
4.
5.

Signature/s

(To be furnished by non Income Tax payers only)
I hereby declare that I am not liable to pay Income Tax.
Please therefore refrain from deducting withholding Tax fron interest payable on the above deposit/s.

Signature/s


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

பணம் இல்லை, நண்பர்கள் இல்லை என்று கவலைப்படாதீர்கள். பணம் மனிதனை உருவாக்குவது இல்லை, மனிதன் தான் பணத்தைச் சேகரிக்கிறான். முழு உலகமுமே மனித சக்தியினால் தான் உருவாக்கப்படுகிறது.

- சுவாமி விவேகானந்தர்

உதயன்
[illegible]
இல. 15, 2வது ஒழுங்கை, [illegible] வீதி, யாழ் பாணம் 26-03-86
தொலைபேசி: 24805 22073
த. பெ. 23

## அகதிகளும் புனர்வாழ்வும்

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் அகதிகளுக்குத் தற்காலிகக் குடியிருப்பு வசதி அதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் அந்த ஒழுங்குகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இப்படி ஒரு செய்தி

திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய தமிழ்ப் பகுதிகளில் பரம்பரையாக வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தவர்கள். இப்போது அகதிகள் என்ற நாமம் பெற்றிருக்கிறார்கள்

இயற்கையின் சீற்றத்தால் அவர்கள் அகதிகளாகவில்லை மனிதனின் சீற்றத்தால் — அரசாங்கப்படைகளின் சீற்றத்தால் தமிழர் அகதிகளாக வேண்டியதாயிற்று.

அதனால் அவர்கள் பிறந்த மண்ணை — தமது சொந்தப் பிரதேசத்தை — கிராமத்தை விட்டு இங்கு வரவேண்டியதாயிற்று தமது வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டுத் தேடிய உடைமைகளை, சொத்துக்களை இழந்து வெறுங்கையோடு அவர்கள் வந்தனர் தமது பெற்றோர், உற்றார் உறவினர்கள் உயிர்களைப் பலி கொடுத்துவிட்டு இங்கு வந்தார்கள் தமது உயிர்களையாவது பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இங்கு வந்தார்கள் அவர்களில் பலருக்கு யாழ்ப்பாணம் புதிய இடம் உறவினர்கள் என்று சொல்ல இங்கு எவரும் இல்லை.

திக்கற்று நின்ற அவர்களை ஆதரித்துக் கைகொடுத்த தொண்டர் ஸ்தாபனங்கள் பாராட்டுக்கு உரியன கஷ்டப்பட்டு வந்த அவர்களுக்குக் கைகொடுத்த பெருமை அவற்றுக்கே உரியன.

இனப்பிரச்சினை தீர்ந்து அவர்கள் இப்போதைக்குத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் அறிகுறி எதையும் காணோம் இனியும் அவர்களை முகாம்களில் வைத்திருப்பதை விடத் தற்காலிகமாகக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டிருப்பது விரும்பத்தக்கது.

அகதிகள் புனர்வாழ்வைக் கவனித்து வரும் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்களும் இதே போலச் செய்வது அவசியம் எங்கள் சொந்த மக்களை, நீண்ட காலத்திற்கு அகதி முகாம்களுக்குள் வைத்து தனிமைப் படுத்தாமல் சமூகத்தில் சேர்ந்து வாழ வகை செய்ய வேண்டும் அதற்கு எமது சக்திக்கு உட்பட்ட சகல முயற்சிகளையும் செய்து உதவ வேண்டும்

ஆனால் அகதிகள் புனர்வாழ்வு விவகாரத்தில் பல முறைகேடுகள் ஒழுங்கீனங்கள், திட்டமின்மை ஆகிய சீர்கேடுகள் நிலவுகின்றன.

உதயன் வாசகர்களில் ஒருவர் இவற்றை மிகத் தெளிவாகக் கடந்த 24-3-1986 இதழில் எழுதியிருந்தார்

புனர்வாழ்வுச் சேவைக்கென நிதி சேகரிப்பவர்கள் சிலர் நிதிகளை மோசடி செய்கிறார்கள் புனர்வாழ்வுக்கான உதவியைப் பெறுபவர்களும் பல இடங்களில் இருந்து நன்மை பெறுவதற்காக மோசடி புரிகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு தரகர் கூட்டம் ஒன்று தான் பிழைத்துக் கொள்கிறது.

இவை மட்டுமன்றி புனர்வாழ்வுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் ஸ்தாபனங்களிடையே நெருங்கிய தொடர்பு எதுவும் இல்லை.

நானும் உதவி செய்கிறேன், நீயும் உதவி செய் என்ற தோரணையில் ஒரு சீரான வழிமுறை எதுவும் இல்லாமல் இவை செயற்படுகின்றன

இவற்றின் விளைவாக உண்மையாக உதவி தேவைப்படுவோருக்கு அல்லது புனர்வாழ்வு வசதி அவசியமானோருக்கு அது கிடைக்காமலே போய்விடுகிறது. ஆட்களைத் தெரிந்தவர்கள், செல்வாக்கான பேர்வழிகளின் நண்பர்கள் ஆகியோர் இடைத்தது லாபம் என்று சுருட்டிக் கொண்டு போவதாகவும் புகார் கூறப்படுகிறது

இந்தக் குறைகளைச் சீர் செய்தால், ஒழுங்குமுறையை ஏற்படுத்தினால் அல்லற்படும் அகதிகளுக்கு இன்னும் எவ்வளவோ உதவிகளைச் செய்ய வழி பிறக்கலாம்.

எனவே புனர்வாழ்வுச் சேவை நிறுவனங்கள் ஒன்றிணைந்து உதவி வழங்குவதை ஒருசீரமைப்பது மிகவும் அவசரமாகும். அது மட்டுமன்றி அந்த ஸ்தாபனங்களின் கைகளில் கறைபடியாது பார்த்துக் கொள்வது மிக முக்கியமாகும்.

கஷ்டமுறும் ஒருவனுக்கு, இன்னற்படும் ஒருவனுக்கு, உதவுவது பெரும் தர்மம் ஆனால் தர்மத்துக்கெனப் பிறர் வழங்கிய சொத்தைச் சரியான இடத்தில் கொடுக்காமல் வேறு எங்காவது சேர்ப்பது பாவத்திலும் பாவம். உயிர் பிரிந்த பின்னரும் அந்தப் பாவம் தொடர்ந்து வந்து வினை செய்யும். இதனை எவரும் மறந்து விடக்கூடாது

# பிரிந்துசெல்லும் உரிமைபற்றி அன்று பேசியவர் ஜே. ஆர்.

### 'பகிடி'யாக எடுத்ததாக இன்று கூறுகிறார்

பிரிந்து செல்லும் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை நான் தரமாட்டேன் என்று ஏன் நினைக்கிறீர்கள்?

இப்படி 1977 இல் கேட்ட திரு. ஜெயவர்தன, ஆரம்பத்தில் தமிழ் ஈழம் கோரிக்கையை ஒரு பகிடியாக எடுத்துக் கொண்டதாக இன்று கூறுகின்றார்.

இது பற்றிய விவரங்களை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் 'இந்து' நாளிதழில் வெளியிட்டிருக்கிறார்.

அவை இன்று பிரசுரமாகின்றன.

'தமிழ் ஈழம்' கோரிக்கையை பகிடியாக எடுத்துக் கொண்டதாக திரு. ஜெயவர்த்தன இன்று கூறுகிறார்,

இது சுவையை தருகிறது. இலங்கையின் இரண்டாவது பெரிய தேசிய இனத்தின் பெரிய அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாட்டில் தமிழ் ஈழம் பிரகடனம் செய்யப்பட்டது.

1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் ஈழம் அமைக்க ஆணையும் தந்தனர்.

நாடாளுமன்றத்தில் அரசின் உரைக்குத் திருத்தமாக வட்டுக்கோட்டைத் தீர்மானமான தமிழ் ஈழம் பிரகடனத்தை கூட்டணி கொண்டு வந்தது.

அத்திருத்தத்தை அரசும் சிங்கள இனமும் பாரதூரமாக எடுத்துக் கொண்டன.

கூட்டணியின் அத்திருத்தத்தை நாடாளுமன்றம் விவாதித்துக் கொண்டிருந்த சமயம் தான் 1977 இல் இன வன்செயல்கள் வெடித்தன.

அவ் வன்செயல்களின் பின்னால் பொலீஸ்துறையின் பெரிய அதிகாரிகள் பலர் இருந்தனர்.

தமிழ் ஈழம் கேட்டதற்கு வழங்கப்பட்ட தண்டனை தான் 1977 வன்செயல்கள்.

நாடாளுமன்ற விவாதத்தை 18-8-1977 இல் முடித்து வைத்து திரு ஜெயவர்த்தன பேசுகையில் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம். இப்படிச் சிங்களவர் சொல்கிறார்கள்' என்று கூறினார்.

ஈழக்கோரிக்கையை பாரதூரமாகக் கணித்தே திரு ஜெயவர்த்தன மேற்கண்டவாறு பேசினார்

நாடாளுமன்றத்தில் அந்த விவாதத்தின் ஒரு கட்டத்தில் பேசுகையில் 'ரஷ்யாவில் பல இனங்களுக்கு வழங்கப்பட்ட பிரிந்து போகும் சுயநிர்ணய உரிமை பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அமிர்தலிங்கம் பேசினார்

அச்சமயம் திரு ஜெயவர்த்தன குறுக்கிட்டு, "அந்த உரிமையை நான் தரமாட்டேன் என்று நீங்கள் எப்படி எண்ண முடியும் என்று கேட்டார்.

அன்று அப்படிச் சொன்னவர் இன்று தமிழ் ஈழம் கோரிக்கையை தான் 'பகிடி' யாக எடுத்துக் கொண்டதாகச் சொல்கிறார்.

தமிழ் மக்கள் தந்த ஆணை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதுவித சந்தேகமும் இல்லை.

ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைத் தந்தால் அதை மக்கள் முன் வைக்கத் தயாராக இருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணி கூறியுள்ளது.

எமது உரிமைகளைப் பெற அகிம்சை வழியை நாடும்படி திரு. ஜெயவர்த்தன உபதேசம் செய்கிறார்.

கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் மக்கள், தமிழர் தலைவர்கள் அகிம்சை வழியில் தான் உரிமைகோரிப் போராடினார்கள்.

சத்தியாக்கிரகம், ஹர்த்தால்கள், சட்ட மறுப்பு இயக்கங்கள், முதலியன தமிழர்களினால் கடைப்பிடிக்கப்பட்டன.

அகிம்சைப் போராட்டங்கள் உச்சக் கட்டத்தை அடையும் போதோ அல்லது சிங்களத் தலைவர்களுக்கு தமிழர் வாக்குகள் தேவைப்படும் போதோ ஒப்பந்தங்கள் எழுதப்பட்டன. பிரச்சினைகள் தணிந்த பின்னர் அவை கிழித்தெறியப்பட்டன.

குறைந்த பட்ச உரிமைகளைப் பெறுவதற்கு அகிம்சை போராட்டங்கள் பலனளிக்காத நிலையில் தான் தமிழ் ஈழத்துக்கு வழி வகுத்து சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை தமிழர் கோரத் தொடங்கினர்.

இதற்கு அரசாங்கம் பலாத்கார அடக்குமுறையை பாவித்தது. மீண்டும் மீண்டும் சிங்களக் காடையர்களும் படையினரும் சேர்ந்து தமிழருக்கு எதிராக நடத்திய வன்செயல்கள் தமிழ் இளைஞரிடையே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

அகிம்சைப் போராட்டம் தமிழருக்கு மேலும் அழிவைதான் தரும் என்று தமிழ் இளைஞர்கள் திடமாக எண்ணினர்

கடவுளுக்குப் பயந்த அமைதி விரும்பிய தமிழ் இளைஞர்களை வன்செயலுக்குத் தள்ளியது இலங்கை அரசின் செயல்களே.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரக் குற்றங்களை, தமிழ் இளைஞரின் தீவிரவாதத்தைக் காட்டி நியாயப்படுத்த முடியாது.

மனிதத் தன்மையற்றவர்களாக இலங்கைப் படையினர் நடக்கின்றனர். (தொடரும்)

### சாதி அடக்குமுறைக்கு எதிராக

# பேனாவைப் பேராயுதமாக்கி சாதனை புரிந்த எழுத்தாளன்

### டானியல் மறைவுக்கு இரங்கற் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 26

சாதி அடக்குமுறை எதிர்த்த போராட்டத்தில் தனது பேனாவை பேராயுதமாகப்பாவித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் டானியல்.

பிரபல நாவலாசிரியர் திரு. கே. டானியலின் திடீர் மறைவு குறித்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விடுத்த அனுதாபச் செய்தியிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பல இலக்கியப் பங்களிப்புகளில் முன்னணியில் நின்றவர் திரு. டானியல்.

ஈழத்து மண்வாசனை கொண்ட இலக்கியத்துக்கும் செழிப்பை ஊட்டியவர் அவர்

இப்படி அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது

"யாழ் இலக்கிய வட்டம் விடுத்துள்ள இரங்கற் செய்தி வருமாறு:

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் சமூக நற்பண்பாளருமாகிய திரு. கே டானியலின் மறைவு இலக்கிய உலகு முழுவதற்குமே பேரிழப்பாகும்.

பழகுதற்கு இனியவரான இவரின் படைப்புக்கள் உலகுள்ளவரை இலக்கிய மதிப்பில் சுடர்விடக் கூடிய ஆற்றலுள்ளவை.

மக்கள் கலை, இலக்கியப் [illegible] காடச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது:

ஈழத்து இலக்கிய உலகில் நிரந்தரமாக ஜொலித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு துருவ நட்சத்திரத்தின் மறைவைப் போன்று பிரபல சிறுகதை எழுத்தாளரும், நாவலாசிரியரும், தொழிற்சங்க ஈடுபாடுடையவரும், பலதடவை மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சிறைவாசம் அனுபவித்தவருமான திரு கே. டானியலின் மறைவு அமைந்து விட்டது

நீரிழிவு நோய்க்கு இருபத்தைந்து வருடங்களாக உட்பட்டிருந்த போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் எங்கு நடந்தாலும் இராப் பகலென்று பாராமல் அந்தந்தக் கிராமங்களுக்கு துடிப்புள்ள இளைஞனைப் போல் சென்று செயலாற்றும் ஒரு தீவிர இயக்கத்தின் உயிர்நாடி ஓய்ந்து விட்டது

தமிழ் கதைஞர் வட்டம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:—

மறைந்த எழுத்தாளர் டானியல் சமுதாயத்திலே நலிவுற்றவர்களினதும் நசுக்கப்பட்டவர்களினதும் மீட்சிக்காக இலக்கியம் படைத்த இணையற்ற எழுத்தாளர்.

அவர், ஒடுக்கப்பட்ட மக்களிடையே வாழ்ந்து, சமுதாய ஒடுக்குமுறைக்கு எதிராக அந்த மக்களோடு சேர்ந்து போராடியவர்.

அவர்களுடைய இன்னல்களுக்கும் தாழ்நிலைக்கும் உரிய காரணிகளை அனுபவரீதியாக உணர்ந்து ஆராய்ந்து அறிந்தும் அவற்றைத் துடைத்தெறிவதற்காகத் தம்முடைய எழுத்தாற்றலை முழுமையாகவும் முழுவேகத்துடனும் பயன் படுத்தியவர்.

தணியாத தாகத்துடன் இலக்கியம் படைத்துக் கொண்டிருந்த டானியல் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்; ஓயாது எழுதிக் கொண்டிருந்த அவரது பேனா ஓய்ந்து விட்டது.

# யாழ் பஸ்ஸுக்கு சென்றோர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

நல்லூர், மார்ச் 26

பஸ்ஸுக்குச் சென்று கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதனால் மூவர் காயம் அடைந்தனர்.

மன்னாரில் இச்சம்பவம் நடந்தது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

திங்கள் காலை நான்கு மணி அளவில் யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸுக்காக மன்னார் பஸ் நிலையத்தை நோக்கி சில பயணிகள் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது பஸ் நிலையத்தினுள் மறைந்திருந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் பயணிகளில் மூன்று பேர் காயமடைந்து வெவ்வேறு இடங்களில் வீழ்ந்து கிடந்தனர்.

பின்னர் காயமடைந்தவர்களை நோக்கி வந்த சிப்பாய்கள் ஒருவரை மட்டும் மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர்.

காயமடைந்த இரண்டாவது நபர் அங்குள்ள கடை ஒன்றின் அருகே கிடந்தார். அவ்விடத்துக்கு வந்த பொது மக்கள் அவரை மன்னார் ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர்.

மூன்றாவது நபரைக் காணவில்லை எனக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் பற்றிய விவரம் வருமாறு:

கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (67 வயது) இவர் புலோலியைச் சேர்ந்தவர். இவருக்கு நெஞ்சிலும் முதுகிலும், கையிலும் காயங்கள் ஏற்பட்டன.

கிருஷ்ணசாமி கணேசமூர்த்தி (23 வயது) இவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர் இவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது.

இளி என்று அழைக்கப்படும் 23 வயதான சால [illegible] இளைஞரை காணவில்லை [illegible] றது.

### பெண்களுக்கு

## முதலுதவிச் சிகிச்சை தெரிந்திருப்பது அவசியம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

பெண்ணுக்கு சமையல் கலை தெரிந்து இருப்பது எத்துணை அவசியமோ, அதுபோன்று முதலுதவிச் சிகிச்சையும் தெரிந்து இருப்பது அவசியமாகின்றது.

பிரப்பன்குளம் பொது நல சேவாசங்கத் தலைவர் திரு. தா. த. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு சொன்னார்.

யாழ்ப்பாணம், பொன்னப்பா ஒழுங்கையில் ஆரம்ப சிகிச்சை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது

பிரப்பன்குளம் பொது நல சேவா சங்கத்தின் ஆதரவில் இந் நிலையம் திறக்கப்பட்டது.

அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. மாணிக்கவாசகர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

திரு. ஏ பாஸ்கரன் நிலையத்தைத் திறந்து வைத்தார்.



### பொய்யாமொழி

குறள்:

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு

பொருள்:

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

# வீதித் திருத்த வேலைகளை சேவை உணர்வுடன் செய்ய வேண்டும் என்கிறார் யாழ் அரச அதிபர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வீதித் திருத்த வேலைகள் சேவை உணர்வுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்படி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு வை. மு. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த திங்கட்கிழமை யாழ் செயலகத்தில் குடாநாட்டு வீதித்திருத்த வேலைகள் சம்பந்தமான மாநாடு ஒன்றை அரச அதிபர் கூட்டியிருந்தார்.

அந்த மாநாட்டில் பேசுகையிலேயே அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மேற்கண்ட வேண்டுகோளை வெளியிட்டார்.

இந்த மாநாட்டில் முதன் முறையாக வீதித் திருத்த மேற்பார்வையாளர்களும் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பொறியலாளர்கள், பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு வீதிகளின் திருத்த வேலைகளுக்கு சுமார் 1 கோடி 90 லட்சம் ரூபா வரையில் செலவழிக்கப்படவுள்ளது

திருத்த வேலைகளை எப்படி மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றிய விவரங்கள் மாநாட்டில் ஆராயப்பட்டன.

குண்டு, குழிகள் நிறைந்த வீதிகளை மேல் எழுந்தவாரியாக திருத்தம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். பழுதடைந்த வீதிகளை வெட்டி, கொத்தி நன்றாக கற்களைப் போட்டு திருத்த வேண்டும்.

எல்லா வீதிகளையும் திருத்த முடியாவிடினும் திருத்தப் படும் கொஞ்ச வீதிகளாவது நல்ல முறையில் திருத்தப்பட வேண்டும்.

வீதித் திருத்த வேலைகள் இன்னும் 6 மாதங்களுக்குள் முடிவுற வேண்டும். அதற்குப் பின்னர் மழைகாலம் தொடங்கிவிடும்

இப்பணியில் ஈடுபட்டவர்கள் கடந்த காலங்களில் சிறந்த சேவை புரிந்தார்கள்.

இப்பணியில் ஈடுபட்டவர்களுக்கு ஊரப்பற்று, சேவை உணர்வு இன்று அவசியம் தேவை.

வீதித் திருத்தப் பணிகள் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்படவேண்டும்.

இப்படி அரச அதிபர் திரு பஞ்சலிங்கம் தனது உரையில் சொன்னார்.

வீதித் திருத்த வேலைகளுக்கு நிலவும் தட்டுப்பாடு பற்றி ஆராய ஏப்ரல் முதலாம் வாரத்தில் மாநாடு ஒன்றை நடத்த முடிவு செய்யப்பட்டது.

# தமிழ் மக்களின் உள்ளக்குமுறல் தீப்பிழம்பாக மாறிவருகிறது

### சங்கக் கூட்டத்தில் துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தமிழ் பேசுமினத்தின் உள்ளக்குமுறல் தீப்பிழம்பாக மாறி வருகிறது. இதனை வெளிக்காட்டுவதே தீவட்டி ஊர்வலத்தின் நோக்கமாகும்.

அகில இலங்கை ஐக்கிய சருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய திரு ஆ. துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூரிலுள்ள சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் இக் கூட்டம் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசும் பொழுது:-

அரசாங்கம் தமிழ் பேசுமினத்தின் சொந்த இடமாகிய வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உடைமைகளை எரித்தும் உயிருடன் மக்களை அக்கினிக் கிரையாக்கியும் குழந்தைகளை, தாய்மார்களை, வயோதிபர்களை கொன்று குவித்தும் வருவது மக்களுடைய மனத்தை தீச்சுவாலையாக்கி விட்டது.

அடக்கு முறைகளும், அட்டூழியங்களும், பாசிஷ ஆட்சிகளும் கொதித்தெழும் மக்களின் போராட்டச் சக்திகளின் முன்னால் நிமிர்ந்து நிற்க முடியால் போய்விட்ட வரலாறுகள் எமக்கு நல்ல பாடத்தைக் கொடுத்திருக்கின்றன.

பட்டதெல்லாம் போதும் இனிப் பொறுக்க முடியாதென்ற உள்ளக் கொதிப்பைக் காட்ட மக்கள் ஆரம்பித்து விட்டார்கள்.

இப்படி அவர் கூறினார்

27-3-86 அன்று பிற்பகல் 4 30 மணிக்கு வண்ணை சிவன் கோயிலடியில் ஆரம்பிக்கும் தீவட்டி ஊர்வலத்தில் கலந்து கொள்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் திருவாளர்கள் அருமைநாயகம், சிவசாமி, கிருஷ்ணபிள்ளை சிந்தையா ஆகியோரும் பேசினார்கள்.

### நிவாரணம் பெற தகுதியான மீனவர்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மீன்பிடித் தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் விசேஷ உணவு முத்திரை பெற்றுள்ள மீனவர் குடும்பங்களுக்கு மட்டுமே அரசு நிவாரணம் வழங்கும்.

இந்த அடிப்படையில் 14,750 மீனவர் குடும்பங்கள் நிவாரணம் பெறுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

5 க்கும் அதற்குக் கீழ்ப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 200 ரூபாவும், அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கு 250 ரூபாவும் நிவாரணமாக வழங்கப்படவுள்ளது.

## சமய சந்நிதிகளில்

### காரைநகரில் மகோற்சவம்

நல்லூர், மார்ச் 26

அருள்மிகு காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பதினைந்து நாட்கள் நடைபெறும் இத்தினங்களில் ஏப்ரல் 8 ஆம் திகதி இரதோற்சவமும், 9 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலயப் பெருநர் திரு நாத சிவஞானம் அறிவித்துள்ளார்.

### நாச்சிமார் கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் வண்ணை நாச்சிமார் கோயில் மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 24ம் திகதி காலை 9.23 இல் இருந்து 11.22 வரையுள்ள சுபவேளையில் நடைபெறும்

16-3-86 ஞாயிறு ஆரம்பமாகிய யந்திர பூசை நாற்பது தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9ஆவது வருட சேவை!
O/L Day Class (8.30 - 1.30)
(இரண்டாவது பிரிவு)
ஆரம்பமாகவுள்ளது
விக்னு டியூசன் செண்ரர்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# உதயன்

26 03. 1986 புதன்கிழமை

9 வது வருட சேவை!
O/L Evening Class (2.30 p.m.)
(மூன்றாவது பிரிவு)
ஆரம்பம்: 1 . 4 . 86
5,6,7,8,9, ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
விக்னு டியூசன் செண்ரர்
52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில் நடந்த

# தொழிற்சங்க மாநாட்டில் அமளிதுமளி!

கொழும்பு, மார்ச் 26

● வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வாபஸ் வாங்குங்கள்.

● இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் சுமுக தீர்வு காணுங்கள்.

● சண்டை விமானங்கள் வேண்டாம்.

● ஆயுதங்கள் வேண்டாம்.

● யுத்தம் வேண்டாம்.

● எங்களுக்கு சம்பள உயர்வுதான் வேண்டும்

இப்படி 21 தொழிற்சங்கங்கள் நேற்று கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடத்திய ஒரு நாள் மாநாட்டில், தொழிற்சங்கப் பிரமுகர்கள் ஒரே குரலில் வலியுறுத்தினர்.

தாதிமார்களின் வேலை நிறுத்தத்துக்கும் மாநாட்டில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

மாநாடு முடிவுறும் தறுவாயில், சில 'குண்டர்கள்' புகுந்து கூச்சல் இட்டனர்; குழப்பினர் இதைத் தொடர்ந்து ஒரே கலேபரம் நிலவியது.

தொழிற்சங்கத் தலைவர்கள் ஒரு பக்கமாக வெளியேறினர். இக்களேபரத்தில் சிலருக்குக் காயமேற்பட்டதாகக் கூறப்படுகிறது

மாநாட்டில் உரை நிகழ்த்திய தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு;

இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு ஒன்று அவசரமாகக் காணப்பட வேண்டும்.

ஆயுதபலம் மூலம் தீர்வு காணப்படக் கூடாது.

இனப்பிரச்சினையை வைத்து நாட்டை இராணுவ மயப்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது

படைப்பலத்தைப் பெருக்கச் செலவழிக்கும் பணத்தை தொழிலாள வர்க்கத்துக்குச் சம்பள உயர்வாகக் கொடுக்கலாம் —

திரு. வாசுதேவ நாணயக்காரா, ஜனூப். அலவி மௌலானா, பாலா தம்பி உட்படப் பலர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

லங்கா சமசமாஜக் கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை.

போராளிகளும் கூட்டணியினரும்

## பாங்கொக்கில் பௌத்த கிறிஸ்தவ குழுக்களைச் சந்திக்க மறுப்பு

பாங்கொக், வார்ச் 25

தமிழ்ப்போராளிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் பாங்கொக் நகரில் வைத்து பௌத்த, கிறிஸ்தவக் குழுக்களுடன் இனப்பிரச்சினை பற்றிப் பேச்சுக்கள் நடத்த மறுத்து விட்டனர்.

பௌத்த, கிறிஸ்தவக் குழுக்கள் இச்சந்திப்பை நடத்த விருப்பம் தெரிவித்து ஒழுங்குகளையும் செய்திருந்தன சந்திப்பு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறுவதாக இருந்தது

போராளிகளின் அமைப்புகள் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன முன்னர் இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது

எனினும், இச்சந்திப்பில் கலந்து கொள்வதில் தங்களுக்கு அக்கறை இல்லை என்று போராளிகளும் கூட்டணித் தலைவர்களும் இப்போது அறிவித்துவிட்டனர்.

இதன் காரணமாக இச்சந்திப்பு இடம்பெறமாட்டாது என்று கூறப்படுகின்றது.

### 'தேன் பொழுது'

யாழ்ப்பாணம், மார்ச் 26

'தேன் பொழுது' நூல் அறிமுகமும் விமர்சனமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

### திட்டவட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஜெயவர்த்தனவுக்கு பிரதமர் காந்தி அறிவித்து விட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச படைகள் இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்துக் கொண்டு பேச்சுவார்த்தைபற்றி வாயளவில் கூறுவது காலத்தைக் கடத்தும் வேலை என்று இந்திய அரசு நன்குணர்ந்துள்ளது.

இலங்கை அரசு திட்டவட்டமான யோசனைகளுடன் வராத நிலையில் இலங்கைக்கு திரு. பண்டாரியை அனுப்ப தீர்மானிப்பது தவறான சைகையாக இருக்கும் என்று பிரதமர் காந்தி எண்ணுவதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்னும் சில தினங்களில் திட்டவட்டமான யோசனைகளுடன் இலங்கை வராது போனால், இனப்பிரச்சினைக்கான மத்தியஸ்தத்தில் இந்தியாவின் பங்களிப்பு நின்றுவிடும் என்று டில்லி அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசின் யோசனைகளில் சுயாட்சிக்கான அதிகாரப்பரவலாக்கல் எந்தளவு வரை போகும் என்பது கோடிட்டுக் காட்டப்படுவதைப் பொறுத்துத்தான் திரு. பண்டாரி சென்னையில் தமிழ் அமைப்புக்களுடன் பேசுவது தங்கியுள்ளது.

அப்படி இறுதிப் பேச்சுக்கள் நடத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும், பேச்சுக்களில் முன்[illegible] காணுவதற்கான [illegible]ப்பை இந்தியா ஏற்காது ஒன்று டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

நீத்தார் பட்டியல்

## திருமதி கந்தசாமி தங்கரத்தினம்

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி தங்கரத்தினம் காலமாகி விட்டார். இவர் வதிரி நெல்லியடியைச் சேர்ந்த சின்னையா கந்தசாமியின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி மகேந்திரராஜா (ஜேர்மனி) கமலாதேவி இராஜகுலேந்திரன் (கனடா) சிறிகாந்தன் (சவுதி) பத்மதேவி, ஜெகசோதி, ரவிச்சந்திரன், தேவகி ஆகியோரின் அன்புத் தாயாரும் மாணிக்கவாசகரின் சிறிய தாயாரும் செல்வநாயகம் (வர்த்தகர் -கொழும்பு) விக்கினேஸ்வரன் (தவைத்) விஜயாம்பிகை (ஜேர்மனி) சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகலா, சுரேஸ்காந், சுரேஸ்குமார், சுரேஸ்ராஜ், துசாந்தி ராதிகா, சுகிர்தா, விக்கினேஸ்வரன், மாலினி, உஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர். தகனக்கிரியைகள் 26-3-86 இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும் உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் -
மானிப்பாய் N. செல்வநாயகம்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்; நியூ உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 26-03-1986
Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under number QJ60 N 86

## மட்டக்களப்பு பல்கலைக்கழகம் நேற்றோடு மூடப்பட்டது

மட்டக்களப்பு, மார்ச் 26

மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

ஒன்று கூடல் வைபவம் நடத்துவது சம்பந்தமாக நிர்வாகத்துக்கும் மாணவருக்கும் ஏற்பட்ட பிணக்கைத் தொடர்ந்தே பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

ஒன்று கூடல் வைபவத்தைக் கடந்த திங்கள் நடத்த சிரேஷ்ட மாணவர்களும் முடிவு செய்து பல்கலைக்கழக நிர்வாகத்தின் அனுமதியைக் கோரினர். பல்கலைக்கழகம் தொடங்கி 3 மாதங்கள் முடிந்த பின்னர் ஒன்று கூடல் வைபவம் எதற்கு என்று நிர்வாகம் கேட்டதும் அல்லாமல் வைபவத்தை நடத்த கழக மண்டபத்தையும் கொடுக்க மறுத்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

சிரேஷ்ட புதிய மாணவர்கள் திட்டமிட்டபடி ஒன்று கூடலைக் கடந்த திங்கட்கிழமை நடத்தினர். பூட்டப்பட்ட மண்டபத்தின் கதவுகளை உடைத்து உள்ளே சென்று வைபவத்தை நடத்தினர் என்று கூறப்பட்டது

இதைத் தொடர்ந்து பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டதாக நிர்வாகம் நேற்று அறிவித்தது.

## பேராதனையில் விஞ்ஞான பீடம் கூண்டோடு மூடல்!

கொழும்பு, மார்ச் 26

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் நேற்றுடன் மூடப்பட்டது.

விஞ்ஞான பீடத்தில் பணியாற்றும் 22 பீடாதிபதிகள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சம்பளம் போதாது என்ற காரணத்தினால் 22 பீடாதிபதிகளும் ஒரு மாதத்திற்கு முன்னரே தங்கள் இராஜினாமாக்களைச் சமர்ப்பித்து இருந்தனர்.

அந்த இராஜினாமாக்கள் நேற்றுத் தொடக்கம் அமுலுக்கு வந்துள்ளன.

## வல்வெட்டித்துறை முகாமில் இருந்தும் சிப்பாய்கள் வெளியே வந்தனர்

வல்வெட்டித்துறை, மார்ச் 26

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்த சுமார் 40 சிப்பாய்கள் வெளியே வந்தனர். போராளிகள் நடத்திய எதிர்த்தாக்குதலில் அவர்களில் இருவர் காயம் அடைந்தனர் என்று கூறப்படுகிறது.

திங்கட்கிழமை இச்சம்பவம் நடந்தது.

சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற தாக்குதலின் பின்னர் சிப்பாய்கள் முகாமுக்குச் சென்றனர். அவ்வாறு செல்லும் போது வழியில் வெங்காயம் தொங்கவிடப்பட்டிருந்த நான்கு கொட்டில்களைத் தீ வைத்துக் கொளுத்தினர் என்று சொல்லப்படுகிறது

மிளகாய், வெங்காயப் பயிர்களையும் நாசமாக்கிச் சென்றனர் எனவும் அறியவந்தது

முகாமுக்குத் திரும்பச் சென்றவர்கள் அங்கிருந்து ஷெல் தாக்குதலை நடத்தினர்.

அதேசமயம் தொண்டமானாறு முகாமிலிருந்தும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

### கண்ணிவெடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் விபத்தில் சிக்கியது. இறந்த சிப்பாய்களின் சடலங்கள் சிதறுண்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன. — இப்படிச் சாட்சி சொன்னார்.

கொலைகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது

காயம் அடைந்த 4 சிப்பாய்களுக்கு கடற்படை ஆஸ்பத்திரியில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

கண்ணி வெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து பஸ் ஒன்றில் வந்த தமிழ்ப் பயணிகள் மங்கி பிரிட்ஜ் என்ற இடத்தில் இறக்கப்பட்டு சிலரால் தாக்கப்பட்டனர்.

திருமலை நகரின் முக்கிய சந்திகளில் ஆயுதந் தாங்கிய பொலீஸார் காவல் புரிகின்றனர்.

### தம்பாலை சந்தி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர்'

சீருடையினர் பின்பு முகாமுக்குத் திரும்பி விட்டனர் சில வீடுகளில் ரீ.வி., டெக், ரேடியோ முதலியவை சேதம் ஆக்கப்பட்டன. ஒரு வீட்டில் இருந்து படுக்கை விரிப்புகள் கூட எடுத்துச் செல்லப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தோர் விவரம் வருமாறு:-

கோணர் முத்தையா (82வயது) தம்பாலை. இவருக்குக் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. [illegible] (50 வயது) தம்பாலை. இவருக்கு வயிற்றிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டன.

### உற்சவம் ஒத்திவைப்பு

திருகோணமலை, மார்ச் 26

பங்குனி உத்தரமான நேற்று ஆரம்பமாக இருந்த திருகோணமலை கோணேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் ஒத்திப்போடப்பட்டது.

விஷமிகள் ஆலயத்துக்குள் அண்மையில் புகுந்து சேதம் விளைவித்தனர். அதைத்தொடர்ந்து பிராயச்சித்தம் செய்த பின்னரே வருடாந்த உற்சவத்தை நடத்துவது என்று ஆலய நிர்வாகம் தீர்மானித்தது.

### பெண்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிரி பலசரக்குக் கடை, கந்தையா சாப்பாட்டுக் கடை, சேனாதிராஜாவின் டயர்கடை ஆகியவையே எரிந்து சேதமான கடைகள் எனச் சொல்லப்பட்டது.

வவுனியா பஜார் வீதியில் சில்வா ஸ்டோர்ஸ் முன்பாகவும் லொறி ஒன்று எரிந்த நிலையில் காணப்பட்டது.

வவுனியா அரச அதிபர் திரு. கே லோகேஸ்வரனும், பிரஜைகள் குழுவின் செயலாளர் டாக்டர் பரராஜசிங்கமும் எடுத்த முயற்சியால் வவுனியா பால் சபைக்குச் சொந்தமான தண்ணீர் பவுசர் ஒன்று தீ அணைப்பு வேலைகளுக்குப் [illegible]ப்பட்டது. இதனால் 20க்கும் மேற்பட்ட கடைகள் தீயில் இருந்து பாதுகாக்கப்பட்டன.

# விளையாட்டரங்கு

## சென்றலைட்ஸ் வெற்றி

### பல்கலைக்கழக அணியின் ஆட்டம்சோபிக்கவில்லை

— விளையாட்டுச் செய்தியாளர் சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம் மார்ச் 26

கிரிக்கெட் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக அமைந்த நேற்றைய கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி அமோக வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை சென்ரலைட்ஸ் அணி 107 ஓட்டங்களால் தோற்கடித்தது.

பல்கலைக் கழக அணியின் ஆட்டம் சோபிக்கவில்லை.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் அணி அபாரமாக ஆடி. 42. 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துகளை விளாசியடித்த ரஜீவன், மனோஜ் குமார், தொமஸ் ஆகியோர் முறையே 93,55, 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

சசிகரன் 5 விக்கெட்டுக்களையும் மகிந்தா 2 விக்கெட்டுக்களையும் சாந்தகுமார், சிறீரங்கன், மெலானியஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய பல்கலைக் கழக அணி 43 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது

பல்கலைக் கழக ஆட்டக்காரர் ஒருவர் காயம் அடைந்ததினால் அவரால் ஆடமுடியவில்லை.

சசிகரன் திறமையாக ஆடி 79 ஓட்டங்களைப் பெற்றுர்

தொமஸ், சண்முகலிங்கம், அக்ரூ கிறேசியன், விக்னராஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மனோஜ் குமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

### ஹொக்கி வெற்றி - தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் பல்கலைக்கழக அணிக்கும் வட்டுக்கோட்டை வை.எம்.எச்.ஏ. அணிக்கும் இடையில் நடைபெற்ற ஹொக்கி ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் தலா இரு கோல்களைப் போட்டன

பல்கலைக்கழக அணியின் சார்பில் கே சந்தானம் இரண்டு கோல்களையும் போட்டார்.

வை.எம்.எச் ஏ அணியின் சார்பில் முரேஸ், யேசுராஜா ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர்.

இந்த ஆட்டத்துக்கு மத்தியஸ்தர்களாக திரு. கே. பூபாலசிங்கம், வி. இரவீந்திரராஜா ஆகியோர் கடமையாற்றினர்.

### பல்கலைக்கழகம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 26

றிமேர்ஸ் விளையாட்டுக் கழக பெண்கள் அணிக்கெதிரான கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ் பல்கலைக்கழகம் வெற்றி பெற்றது.

யாழ் பல்கலைக்கழக ஆடுதிடலில் நடைபெற்ற இப் போட்டியில் பல்கலைக்கழக அணி றிமேர்ஸ் அணியை 30க்கு 20என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

பல்கலைக்கழக அணியின் சார்பில் கே. கீதாஞ்சலி, வி. இராஜினிதேவி ஆகியோர் தலா 8 புள்ளிகளைப் பெற்றனர்.

றிமேர்ஸ் அணியின் சார்பில் எஸ்.ரதி 8புள்ளிகளைப் பெற்றுர்

இந்த ஆட்டத்துக்கு எம். சி. சேரமான், ஜே. ஸ்ரனிஸ்லொஸ் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

### கலாசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 26

வட்டுக்கோட்டை தொழில் நுட்ப நிறுவன மாணவ மன்றம் கலாசாரவிழா ஒன்றை இன்று நடத்தவுள்ளது

### குண்டு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர்கள்.

1,500க்கும் மேற்பட்ட பிரயாணிகள் குழந்தைகளுடனும், பொதிகளுடனும் வீதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுது, திடீரென குண்டு ஒன்று வெடித்த சத்தம் கேட்டதாம்

ரயில் எரிவதாக நாம் பின்னர் அறிந்தோம் — இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

ரயிலிலிருந்து இறங்கிய பிரயாணிகள் புளியம்குளம், ஓமந்தை, கனகராயன்குளம் ஆகிய இடங்களுக்குச் சென்றுர்கள்.

இவர்களில் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் புளியங்குளம் மகாவித்தியாலயத்திலும் தனியார் வீடுகளிலும் நேற்று இரவு தங்கினர். ஒரு சில பகுதியினர் பஸ்கள் மூலம் யாழ்நகரை நோக்கி இரவு 9 மணியளவில் வந்து சேர்ந்தனர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து பிரயாணிகளை ஏற்றி வந்த இரண்டு பஸ்கள் கொடிகாமத்திலும் சாவகச்சேரியிலும் பழுதடைந்து நிற்பதாக அறியவந்தது.

ஓமந்தையில் தங்கி நிற்கும் பயணிகள் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சி பஸ் டிப்போவிலிருந்து பிரயாணிகளை ஏற்றிவர விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

திரு கனகரத்தினம் யாழ் தேவி ரயிலில் சென்று திரும்பி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, மார்ச் 26

வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதியின் வெள்ளி விழாவும் மலர் வெளியீடும் ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இந்த வைபவம் நடைபெற இருந்தது.

### தேடுதல்

திருகோணமலை, மார்ச் 26

நேற்றுக்காலை முதல் சாம்பல்தீவு, ஆத்திமோட்டை, துவரங்காடு பகுதிகளில் ஆயுதப்படையினர் பலத்த தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

## பாதுகாப்பு

"ஆறிலும் சாவு, நூறிலும் சாவு" (மரணம் எந்த வயதிலும் எப்பொழுதும் வரலாம்) என்பதறகாக நாமே மரணத்தை நோக்கிச் சென்று அவமாக எம்மை அழித்துக்கொள்ளக்கூடாது.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என்பது வள்ளுவப் பெருமான் வாக்கு. அஞ்சவேண்டியதைக் கண்டு அஞ்சி, ஒதுங்கி, தவிர்த்து நடத்தலே அறிவுள்ள செயலாகும்.

ஆகவேதான்

அஞ்சவேண்டிய கோட்டைக் குண்டடிக்கு அஞ்சியும், உள்நாட்டு வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள் பெறவரும் தமிழ்ப் பேசும் பெருமக்கள் இந்த அவலங்களில் சிக்கித்தவிக்கக் கூடாது என்பதற்காகவும் கோட்டைக் குண்டடி பாயும் தூரத்திற்கு அப்பால் உள்ள ஸ்ரான்லி வீதியில் 'ரெலிகுளோப்' சொற்பகாலத்திற்கு முன்னர் நிறுவப்பெற்றது.

தமிழ்ப்பேசும் பெருமக்களுக்கு பாதுகாப்பான சூழலில் வேண்டிய பொழுதெல்லாம் சேவை நல்க தினமும் இரவுபகல் 24 மணி நேரமும் கருமம் ஆற்றிக் கொண்டேயிருக்கிறது 'ரெலிகுளோப்'!

கோட்டைக் குண்டடி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளைகளிலும் கதவடைக்கப்படாது சேவையில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கிறது 'ரெலிகுளோப்'!

எந்நாளும் எந்நேரமும் அச்சம் எதுவுமின்றி பேச வசதி செய்து தருகிறது 'ரெலிகுளோப்'!

பணிவும் பக்குவமும் மிக்க ரெலிகுளோப்' சேவையில் உங்கள் பாதுகாப்பும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org